


23.08.2024

தலைப்புச் செய்திகள்

1. இந்திய விண்வெளி மையத்தை, விண்ணில் உருவாக்கும் முயற்சிகளில் இஸ்ரோ முன்னேற்றப் பாதையில் செல்வதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி, உக்ரைன் அதிபர் வெலோடிமிர் ஸெலன்ஸ்கி உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்

3. தமிழ்நாட்டில் ஆவின் பால் தட்டுப்பாடு இல்லை என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோதங்கராஜ் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு முடிவுகளை விரைந்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதன் தலைவர் திரு. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

5. இத்தாலியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா, அமெரிக்காவின் டெனிசன் இணை - இத்தாலி இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

தேசிய விண்வெளி தினம்

விண்வெளித் துறை வளர்ச்சியோடு சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு இந்திய விண்வெளி துறை இன்றியமையா பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினத்தை ஒட்டி புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், விண்வெளி

ஆராய்ச்சி மனிதர்களின் திறனை அதிகரித்திருப்பதோடு, பல கற்பனைகளை மெய்யாக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்

பிரபஞ்சத்தின் ஆச்சரியங்களை நம் நாட்டு விண்வெளி துறை வெளிப்படுத்தி இருப்பதாக அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

விண்வெளியில், இந்திய விண்வெளி மையத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இஸ்ரோ முன்னேறி செல்வதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மனிதர்களை விண்ணுக்கு கொண்டு செல்லும் ககன்யான் திட்டத்தை தாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வள ஆதாரங்களுடன் நம்நாடு பல்வேறு விண்வெளி சாதனைகள் படைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங், நரேந்திரமோடி அரசு விண்வெளித்துறைக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இஸ்ரோவின் ரோபோடிக் மற்றும் பாரதிய அந்தாரிக்ஷ் ஹேக்கத்தான் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு குடியரசு தலைவர் பரிசுகளை வழங்கி கவுரவித்தார்.

இந்நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் விண்வெளித் துறையின் சாதனைகளை பெருமிதத்துடன் நினைவு கொள்வதாக கூறியுள்ளார்.

இஸ்ரோ விஞ்ஞானிகளின் அளப்பறிய சாதனைகளை போற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப்தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியாவின் விண்வெளி பயணத்தின் வெற்றி பாதையை மகிழ்ச்சியுடன் நினைவு கூறும் இத்தினத்தில் சுயசார்பு பாரத உணர்வு உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

விண்வெளி துறையின் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் வாழ்த்து தெரிவித்த அவர், அவர்தம் புதுமையான சிந்தனைகளும், தொலைநோக்கு பார்வையும் இந்தியாவை உச்சத்திற்கு கொண்டு செல்லும் என்று கூறியுள்ளார்

விண்வெளி தினம் குறித்து திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அறிவியல் துறை தலைவர் டாக்டர் வைலட் தயாபரன் எமது செய்தி பிரிவிடம் எமது செய்தி பிரிவிடம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

பிரதமர்

உக்ரைன் நாட்டுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி அங்கு அமைதியை நிலைநாட்டும் தீர்மானத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

போலந்தில் தமது அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு உக்ரைன் தலைநகர் கீவ் சென்றுள்ள பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொருளாதாரம், வர்த்தகம், வேளாண்மை, கட்டமைப்பு, சுகாதாரம் உள்ளிட்ட பிரிவுகளில் உக்ரைன் நாட்டுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்றார்.

பிரதமரின் உக்ரைன் பயணத்தின் போது அப்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, உக்ரைன் அதிபர் வெலோடிமிர் ஸெலன்ஸ்கி உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

உக்ரைன் சென்ற பிரதமருக்கு இந்திய வம்சாவளியினர் அன்பான வரவேற்பை அளித்தனர்.

கீவ்வில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கு பிரதமர் அஞ்சலி செலுத்தினார்.

□□□□□□□□□

மன் கி பாத்

பிரதமர் அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் நாளை மறுநாள் உரையாற்றுகிறார்.

அலபழள.லைஇ நமோ செயலி, 1800117800 என்ற இலவச தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் இன்று மாலைக்குள் இதில் இடம்பெற வேண்டிய தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

□□□□□□□□□

ராஜ்நாத் சிங்

இந்தியா, அமெரிக்கா இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடைய வேண்டியதன் அவசியத்தை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்திருக்கிறார்.

அரசுமுறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர், இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றுகையில், நம்நாட்டின் கலாச்சார மதிப்பீடுகளை வெளிநாடுவாழ் இந்தியர்கள் தொடர்ந்து கடைபிடித்து வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சரின் இந்த பயணத்தின் போது இருநாடுகளிடையேயான ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

திரு. ராஜ்நாத் சிங் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் எதிர்கால ராணுவ ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

□□□□□□□□□

மருந்துகள் தடை

மத்தியஅரசு 156 மருந்து வகைகளுக்கு தடை விதித்துள்ளது.

உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் வலி நிவாரணி, மல்டி விட்டமின், நோய் எதிர்ப்பு மாத்திரைகள் இதில் அடங்கும்.

இம்மருந்துகளை பயன்படுத்துவதால் உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு மாற்று மருந்துகளை பயன்படுத்த சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

மருத்துவ வல்லுநர் குழு மற்றும் மருந்து தொழில்நுட்ப ஆலோசனை வாரியத்தின் அறிவுறுத்தலின் பேரில் இம்முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கூறியுள்ள சுகாதார அமைச்சகம்,

இம்மருந்துகளின் பயனை விட பக்கவிளைவுகள் அதிகமாக இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளதாக கூறியுள்ளது.

□□□□□□□□□

கோவிந்த் மோகன்

மத்திய அரசின் புதிய உள்துறை செயலராக திரு. கோவிந்த் மோகன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பொறுப்பை வகித்த திரு. அஜய்குமார் பல்லாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் இந்நடவடிக்கை.

திரு. கோவிந் மோகன் மத்திய கலாச்சார அமைச்சகத்தின் செயலராக பணியாற்றியுள்ளார்.

□□□□□□□□

மனோ தங்கராஜ்

தமிழ்நாட்டில் ஆவின் பால் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்தாண்டை விட 10 லட்சம் லிட்டர் பால் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டிருப்பதால், தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்.

□□□□□□□□

மு.சு. பெரியகருப்பன்

தமிழகத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு முன்னோடி திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. மு.சு.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையை இன்று திறந்துவைத்து பேசியஅவர், மாநிலம் முழுவதும் மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

□□□□□□□□

தொழிலாளர் நலத்துறை

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சீர்த்திருத்தங்கள் காரணமாக அவர்களது குடும்பங்கள் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

நலவாரியங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதோடு, வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

□□□□□□□□

வுஞேஞுஊ வாய்ஸ்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு முடிவுகளை தாமதமின்றி வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் தலைவர் திரு. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வுஞேஞுஊ தலைவராக இன்று பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்வுகள் குறிப்பிட்டகால அட்டவணையில் திட்டமிட்டப்படி நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

ராமதாஸ்

தமிழ்நாட்டில் புதிய குடும்ப அட்டைகள் கோரி விணணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் டாக்டர்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய குடும்ப அட்டைக்காக சுமார் 3 லட்சம் பேர் விண்ணப்பித்தும், ஒன்றரை வருடங்களாக வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

□□□□□□□□

திருச்சி பொன்மலை

திருச்சி ரயில்வே கோட்டத்திற்குட்பட்ட பொன்மலை ரயில் நிலையம் அருகே, மீட்பு பணிகள் தொடர்பான ஒத்திகை பயிற்சி இன்று நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் திரு.அன்பழகன், ரயில் விபத்து ஏற்பட்டால், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கைகள் குறித்து இந்த ஒத்திகை பயிற்சி நடைபெற்றதாக கூறினார்.

இதற்காக ரயில் விபத்துக்குள்ளாகி ரயில் பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்று இருப்பது போலவும், அதிலிருந்து பயணிகளை மீட்பது போலவும் தத்ரூப பயிற்சிககள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்

விபத்தில் சிக்கிய நபர்களை மீட்டு முதலுதவி வழங்கி ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைப்பது போன்ற ஒத்திகையும் இதில் இடம்பெற்றது.

இப்பயிற்சியில் தேசிய பேரிடர் மீட்புத்துறையினர், தீயணைப்பு துறையினர் என 250-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

□□□□□□□□

முருகன் மாநாடு

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு பழனியில் நாளை தொடங்குகிறது.

இம்மாநாடு தொடர்பாக கட்டுப்பாட்டு அறை எண்களை தமிழக அரசு இன்று அறிவித்துள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்க இணையதளம் வாயிலாக பதிவு செய்தவர்கள் இந்த தொலைபேசி எண்கள் மூலம் விவரங்களை அறிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

குடற்புழு நீக்க நாள்

தமிழகத்தில் அரியலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் முதல்கட்டமாக குடற்புழு நீக்க மருத்துவமுகாம் இன்று நடைபெறுகிறது

ஒருவயது முதல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் 20 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்கும் இம்மாத்திரைகள் வழங்கப்பட உள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் 2 லட்சத்து 17 ஆயிரம் நபர்களுக்கு இம்மாத்திரைகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக வரும் 30-ம் தேதி இம்முகாம் நடைபெறவுள்ளது.

□□□□□□□□

இருவரி

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் கொடியசைத்து தொடங்கிவைத்தார்

இதேபோல் திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் மாணாக்கர் பங்கேற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை ஆண்டு பெருவிழா கொடியேற்றத்தை முன்னிட்டு நாகை, கீழ்வேளூர் பகுதிகளில் பள்ளி கல்லூரிகளுக்கு வரும் 29-ம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு அய்யா வைகுண்டர்சாமி தலைமை பதியில் ஆவணி பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

□□□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த ஒருவாரத்திற்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல், வங்க கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த 5 தினங்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□□

கோவில்

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் அருள்மிகு சங்கரநாராயணன் சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது

□□□□□□□□□

டென்னிஸ்

இத்தாலியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா, அமெரிக்காவின் டெனிசன் இணை - இத்தாலி இணையை இன்று எதிர்கொள்கிறது.

□□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

□□□□□□□□□